திரு. கு. பா. பழனியப்பன் : தலைவரவர்களே, நாகர்கோவில் வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பாக 2 நாட்களாக, அங்கே போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் நோட்டிஸ் கொடுங்கள். வரிசையாக வரும். போராட்டம் எதுவாக இருந்தாலும் நோட்டிஸ் கொடுங்கள்.

(இ) அரசு சட்டமுன்வடிவுகள், உத்திரவுகள் தமிழிலே வெளியிடாமல் இருத்தல்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான செய்தி, இம்பார்ட்டன்ட் மேட்டர்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்பார்ட்டன்ட் மேட்டராக இருந்தால் என்னுடைய அறைக்கு வாருங்கள். பேசுவோம். திடீரென்று சபையிலே இம்ப்பார்ட்டன்ட் மேட்டர் என்று சொல்லக்கூடாது (குறுக்கீடு).

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, இது மிக முக்கியமானது. இந்த அரசாங்கத்தின் சட்டமுன்வடிவுகள், உத்தரவுகள் எல்லாம், அனைத்தும் ஆங்கிலத்திலே வந்து கொண்டிருக்கின்றன. தமிழிலே வெளியிடுவது இல்லை. உத்தரவுகள் எல்லாம் ஆங்கிலத்திலே வருகின்றன. இதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த உத்திரவு தமிழில் வர வில்லை என்று சொல்லுங்கள். அதற்கான தமிழ் விளக்கத்தை நான் தர ஏற்பாடு செய்கிறேன்.

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் தொடர்ச்சி.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நம்முடைய கவர்னர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த அறிக்கையை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு ஒருசில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். நம்முடைய ஆளுநர் அவர்கள் முதன்முதலாகத் தமிழிலேயே அவர்களுடைய உரையை நிகழ்த்தியது நாம் அனைவரும் பெருமை படக்கூடிய ஒரு விஷயம். அந்த அடிப்படையிலே மொழிப் பிரச்னையை எடுத்துக்கொண்டாலும், அகில இந்திய அளவில் நம்முடைய அகில உலக மேதை, ஆசியாவின் ஜோதி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற வரை ஆங்கிலம் நீடிக்கும், அங்கே இந்தி திணிக்கப்படாது என்று சொன்னார்கள். அதைத்தான் நாம் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். அந்த அடிப்படையில் நம்முடைய அரசு